ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மாற்றமுள ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாற்றமுள ॥

## நம்பியை நோக்கி உய்யும் வகையருள் எனல்

‡மாற்றம் உள⋆ ஆகிலும் சொல்லுவன்⋆ மக்கள்
தோற்றக் குழி⋆ தோற்றுவிப்பாய்கொல் என்றின்னம்⋆
ஆற்றங்கரை வாழ் மரம்போல்⋆ அஞ்சுகின்றேன்⋆
நாற்றச் சுவை⋆ ஊறொலியாகிய நம்பீ! (1)

சீற்றம் உள⋆ ஆகிலும் செப்புவன்⋆ மக்கள்
தோற்றக் குழி⋆ தோற்றுவிப்பாய்கொல் என்றஞ்சி⋆
காற்றத்திடைப்பட்ட⋆ கலவர் மனம்போல⋆
ஆற்றத் துளங்கா நிற்பன்⋆ ஆழி வலவா! (2)

தூங்கார் பிறவிக்கள்⋆ இன்னம் புகப்பெய்து⋆
வாங்காய் என்று சிந்தித்து⋆ நான் அதற்கஞ்சி⋆
பாம்போடொரு கூரையிலே⋆ பயின்றாற்போல்⋆
தாங்காதுள்ளம் தள்ளும்⋆ என் தாமரைக் கண்ணா! (3)

உருவார் பிறவிக்கள்⋆ இன்னம் புகப்பெய்து⋆
திரிவாய் என்று சிந்தித்தி⋆ என்றதற்கஞ்சி⋆
இருபாடெரிகொள்ளியின்⋆ உள் எறும்பே போல்⋆
உருகாநிற்கும்⋆ என்னுள்ளம் ஊழி முதல்வா! (4)

கொள்ளக் குறையாத⋆ இடும்பைக் குழியில்⋆
தள்ளி புகப் பெய்தி கொல்⋆ என்றதற்கஞ்சி⋆
வெள்ளத்திடைப்பட்ட⋆ நரியினம் போலே⋆
உள்ளம் துளங்கா நிற்பன்⋆ ஊழி முதல்வா! (5)

படை நின்ற⋆ பைந் தாமரையோடு⋆ அணி நீலம்
மடை நின்றலரும்⋆ வயலாலி மணாளா⋆
இடையன் எறிந்த மரமே⋆ ஒத்திராமே⋆
அடைய அருளாய்⋆ எனக்குந்தன் அருளே (6)

‡வேம்பின் புழு⋆ வேம்பின்றி உண்ணாது⋆ அடியேன்
நான் பின்னும்⋆ உன் சேவடியன்றி நயவேன்⋆
தேம்பல் இளந் திங்கள்⋆ சிறைவிடுத்து⋆ ஐவாய்ப்
பாம்பின் அணைப்⋆ பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! (7)

‡அணியார் பொழில் சூழ்⋆ அரங்க நகர் அப்பா⋆
துணியேன் இனி⋆ நின் அருள் அல்லதெனக்கு⋆
மணியே! மணி மாணிக்கமே!⋆ மதுசூதா⋆
பணியாய் எனக்குய்யும் வகை⋆ பரஞ்சோதீ! (8)

‡நந்தா நரகத்தழுந்தா வகை⋆ நாளும்
எந்தாய்! தொண்டர் ஆனவர்க்கு⋆ இன்னருள் செய்வாய்⋆
சந்தோகா! தலைவனே!⋆ தாமரைக் கண்ணா⋆
அந்தோ! அடியேற்கு⋆ அருளாய் உன்னருளே (9)

‡குன்றம் எடுத்து⋆ ஆனிரை காத்தவன் தன்னை⋆
மன்றில் புகழ்⋆ மங்கை மன் கலிகன்றி சொல்⋆
ஒன்று நின்ற ஒன்பதும்⋆ வல்லவர் தம்மேல்⋆
என்றும் வினையாயின⋆ சாரகில்லாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖